சிறுவர்

# அமுதம்

**19.6.96**

கிண்ணம்: 7 எண்ணம்: 6



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

KINDER LITERARISCHES MAGAZIN

## உள்ளே............


| | பக்கம் |
|---|---|
| எண்ணம் | 2 |
| அணில் | 4 |
| யார் பெரியவர்? | 5 |
| அதிசய மோதிரம் | 7 |
| ராஜ விசுவாசம் | 9 |
| அதிவீரராம பாண்டியன் | 13 |
| உங்களுக்குத் தெரியுமா? | 16 |
| கண்டு பிடிப்பு | 18 |
| தலைட்டாத தென்னாலிராமன் | 20 |
| பழங்கள் | 22 |
| சொ. க. பி. முடிவுகள் | 23 |
| ஜீவகாருண்யம் | 25 |
| சொல்லித் தா! | 28 |
| பாலித் தீவு | 29 |
| நெதர்லாந்து | 31 |
| சிட்டுக்குருவி | 33 |

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேற்கு மொழிகளின் புவிமிசையோங்கும்

– பாரதி –



அன்புச் சிறுவர் சிறுமியரே!!

சஞ்சிகை உங்களுக்குக் கிடைப்பது பெரிதல்ல அதனால் நீங்கள் பயன் பெறுகிறீர்கள் என்ற நினைவு எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழை ஆர்வத்துடன் தமிழ்ப்பாடசாலைகளில் கற்று வரும் உங்களின் வளர்ச்சிக்கான சஞ்சிகையாக சிறுவர் அமுதம் விளங்குவது சந்தோஷமான விஷயம்தான்.

நீங்கள் குழந்தைப் பருவத்தைக் கடந்து விட்டவர்கள். எப்படிப் பெரியவர்களாக ஆனாலும் தாய் தந்தைக்கு அடங்கிய பிள்ளைகளாக இருப்பதை அவர்கள் விரும்புவார்கள். இது இயற்கை. அவர்கள் விரும்பும் பிள்ளையாக நீங்களும் இருப்பது விருப்பத்துக்குரியதே. ஆனால் உங்களுக்கென்றும் விருப்பு வெறுப்புக்கள் இருக்குமல்லவா!

பெற்றோருக்கு அடங்கிய பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்பதற்காக, அவர்கள் சொல்பவை எல்லாவற்றிற்கும் தலையாட்டி விடாதீர்கள். எதிர்காலம் உங்களுடையதே. நீங்கள் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிகளும் உரமாகி, எதிர் காலத்தை வளமாக்க வேண்டும். ஆனபடியால் பெரியவர்களான பெற்றோர்களின் எண்ணங்களுக்கும் மதிப்புக் கொடுப்பதோடு நின்று விடாமலும், நீங்கள்

எடுக்கும் முடிவு சரியானது என்று தான் தோன்றித் தனமாக முடிவுகளை எடுக்காமல் சிந்தித்துத் தெளிவான முடிவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். எதிர்கால வெற்றி உங்களுடையதே.

ஆசிரியை

!!!

**மக்களின் பணத்தைச் அபகரிக்க அரசியல் தலைவர்களில் முதலிடத்தை வகிப்பவர் பிலிப்பையின்ஸ் அதிபராக இருந்த மார்க்கோஸ் தான். லஞ்சம், அதிகார துஷ்பிரயோகம், சுரண்டல் இவை மூலம் இவர் சேகரித்த தங்கம் மட்டும் 1200 தொன். கொள்ளையடித்த தங்கம் எங்கே இருக்கிறது என்று தெரியுமா? சுவிற்சிலாந்து நாட்டிலுள்ள விமான நிலையத்தின், வங்கியில் பாதுகாப்பாக இருக்கின்றது.**

## அணில்



அணில் ஒரு மென்மையான பிராணி. இதன் வால் பஞ்சு போன்று மென்மையாக இருக்கும். இதன் கால்களில் கூரான நகங்கள் உண்டு. பின்னங்கால்களால் பலமாக உந்திப் பாயும். பின்னங் காலில் உள்ள கூரான நகங்களால் மரத்தில் பிடித்து விரைவாக ஏறும். அணில் காலத்துக்கேற்ப உணவுகளை மாற்றியமைக்கும்.

கோடை காலத்தில் பூச்சி, பழம், புழு என்பனவற்றை உண்ணும். வசந்த காலத்தில் பழங்கள், மரப்பட்டை போன்றவற்றை உண்ணும். இலையுதிர் காலத்தில் காளான், விதைகள், தானியங்கள் போன்றவற்றை உண்ணும்.

குளிர் காலத்தில் குளிராமல் இருப்பதற்கேற்ப கூடம் அமைத்துப் படுத்திருக்கும். வசந்த காலத்தில் பெண் அணில் நான்கு அல்லது ஐந்து குட்டிகள் ஈனும். அணில் குட்டியைப் பிள்ளை, குஞ்சு என்றும் சொல்லுவார்கள். கோடை காலத்தில் குஞ்சுகளை வெளியே அழைத்துச் செல்லும். தோட்டங்கள், வயல்கள், காடுகள் போன்ற இடங்களில் உணவைத் தேடி உண்ணும்.

இலையுதிர் காலத்தில் தன் இருப்பிடங்களில் உணவைச் சேமித்து வைத்துக் கொள்ளும். குளிர் காலத்தில் இவற்றை உண்ணும். அணில் தன் முன்னங்கால்களைக் கைகளைப் போல பயன் படுத்துகிறது. கூர்மையான நகங்களால் விதைகளை, தானியங்களை உடைத்து உண்ணும். அணில் தன் இருப்பிடத்தை மரப் பொந்துகள் (துவாரங்கள்), நிலத்திலுள்ள மறைவான குழிகள் போன்ற இடங்களில் தென்னந்தும்பு, சருகுகள் போன்றவற்றால் கூடம் (கூடு) அமைத்து வசிக்கும்.

— நிரோஷினி ஹரிச்சந்திரன் —

## யார் பெரியவர்?

ஒருநாள் கையில் இருக்கும் விரல்களுக்குள் "யார் பெரியவர்?" என்று போட்டி ஏற்பட்டது. கையிலிருக்கும் பெரிய விரல் "உங்கள் எல்லோருக்கும் முதலில் நான் தான் இருக்கிறேன். அதனால் நான் தான் பெரியவன்" என்று சொன்னது. அதற்கு இரண்டாவது விரலான சுட்டு விரல் "என்னைக் காட்டித்தான் யாரையும் கவனம் என்று எச்சரிக்கிறார்கள். அதனால் நான்தான் பெரியவன்" என்று பெருமையுடன் சொன்னது.



அதைக் கேட்டதும் நடு விரல் சொன்னது "உங்கள் எல்லோரையும் விட நான் தான் உயரமானவன். அதனால் நான் தான் பெரியவன்". அதற்கு அடுத்து இருக்கும் விரல் சிரித்தது.பின் மற்ற விரல்களைப் பார்த்து "உங்கள் எல்லோரையும் விட பெறுமதியானவன் நான் தான். எனக்குத் தான் விலை உயர்ந்த மோதிரங்கள் எல்லாம் போடுகிறார்கள். அதைத் தெரியாமல் ஏதேதோ பேசுகிறீர்களே! என்றது. எல்லா விரல்களும் சின்ன விரலை ஆவலுடன் பார்த்துக் கொண்டன.

"நீ என்ன சொல்லப் போகிறாய்!" என்றும் கேட்டன. சின்ன விரல் கவலையோடு கடவுளே, என்னை ஏன் சின்னவனாகப் படைத்தாய்! என்றது. அப்போது கடவுள் "மக்கள் என்னைக் கும்பிடும் போது நீ தானே முதலில் தெரிகிறாய். ஆனாலும் நீங்கள் எல்லோரும் மனிதனுக்குத் தேவையானவர்கள் தான். இதில் பெரியவர்கள் சின்னவர்கள் என்ற பேதம் வேண்டாம்" என்று அவர்களுக்குள் இருந்த போட்டியை விலக்கினார்.

—சுகந்தி வரதராஜா—

## அதிசய மோதிரம்

ஆயுதங்களைக் கொண்டு போவதா? இல்லையா? என்ற விவாதத்தில் தோற்றுப் போனதால் கௌதம் தனது முகத்தைச் சுழித்துக் கொண்டான்.

"அண்ணா! ஏன் அப்படி முகத்தைச் சுழித்துக் கொண்டிருக்கிறாய்? ஆயுதங்கள் இல்லாவிட்டால் தோற்றுவிடும் கோழையா நீ, வீரன். அப்படியிருக்கையில் உனக்கேன் ஆயுதம்?" அண்ணனின் கோபத்தைச் சற்று மாற்றினாள் சித்திரா.

"எனக்கு ஆயுதம் வேண்டுமென்று நான் சொன்னேனா? ஆயுதமிருந்தால் சற்றுப் பாதுகாப்பு, அதிலும் உங்களுக்கு சரியாகச் சண்டை போடவும் தெரியாது அதனால் சிலவேளைகளில் தேவைப்படலாம் என்று நினைத்தேன்.......உங்களுக்குத் தேவையில்லையென்றால் எனக்கொரு பிரச்சனையு 'மில்லை" சமாளித்தான் கௌதம்.

"அது எங்களுக்குத் தெரியாதா?" என்ற சித்திரா ரமாவின் பக்கம் திரும்பி ரகசியமாகச் சிரித்தாள்.

சற்றுநேரம் கழிந்தது. வானம் இருட்டி விடவே ரமா சற்றுப் பயப்பட்டாள். வீட்டை விட்டு வந்த முதல் நாளில் அவள் அப்படிப் பயப்படவில்லை மனதில் ஏதோ தைரியமிருந்தது. கௌதம், சித்திரா அவர்களுடைய தாத்தா வீட்டில் தங்கியிருந்த போதும் பயப்படவில்லை. ஆனால் இப்போது, அதிலும் கோட்டையை நெருங்கிக் கொண்டிருப்பதை எண்ணும் போது பயம் கூடியது. ஏதோ

தவறு செய்துவிட்டதாக நினைத்தாள். தன்னை மட்டுமில்லாமல் மற்றவர்களையும் ஆபத்திலுள்ளாக்கி விட்டோமோ? என்றும் சிந்தித்தாள். ஆனால் மோதிரம் இருப்பதனால் தனக்குத்தானே ஆறுதல் சொன்னாள்.



சற்றுத் தொலைவில் ஒரு நாவல் மரம் தென்பட்டவே சிறார்கள் அன்றிரவு அங்கு ஓய்வெடுக்க எண்ணினார்கள். ரமாவும் சித்திராவும் கீழே உட்கார்ந்து கொண்டார்கள். கௌதம் மரத்தின் மேல் ஏறினான் பழம் பிடுங்க. திடீரென அதிசய மோதிரத்திலிருந்து புகை வரத் தொடங்கியது.

## ராஜவிசுவாசம்



முதலாம் எலிஸபெத் இங்கிலாந்தை ஆண்ட காலம் பொற்காலம் என்று அழைக்கப் படுகிறது. அக்கால கட்டத்தில் தான் இங்கிலாந்து சாம்ராச்சியமாக விரிவடைந்தது. அதற்கான காரணங்களில் அரசி திருமணமாகாத கன்னியாகவே

இருந்ததும் ஒரு காரணமாகும். பல இளைஞர்கள் அரசியின் பார்வை தங்கள் மீது திரும்பாதா? என ஏக்கம் கொண்டிருந்த காலம் அரசியின் மனதைக் கவர தங்கள் தங்கள் திறமையை பலவிதமாக வெளிக் காட்டினர்.

இயற்கையிலேயே ஆங்கிலேயர்கள் ராஜவிசுவாசம் கொண்டவர்கள். காரணமும் இருக்கும் போது சொல்லவா வேண்டும். வால்டர் ராலே என்னும் என்னும் இளைஞன் தன் விசுவாசத்தை அரசிக்குக் காட்டுவதற்காக பல சாதனைகளைப் புரிந்தான். அரசியின்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பை வெளிப்படுத்த ஒருசமயம் அரசியாரின் பாதங்கள் நிலத்தில் பட்டு விடக்கூடாது என்பதற்தாகத் தன் மேலாடையைக் கழற்றி நிலத்தில் விரித்தான் என்று ஒரு கதை உண்டு.

வால்டர் ராலேயின் திறமைக்காக 1584ம் ஆண்டில் இவருக்குச் "சேர்" பட்டமளித்து அரசியார் கௌரவித்தார். ராலே கற்பனைத் திறமை கொண்ட எழுத்தாளர், திறமை மிக்க மாலுமி, விஞ்ஞானி. நாட்டுக்காக அவர் செய்தவை ஏராளம். கடல் கடந்து நாடுகளைத் தம் வசம் வைத்திருந்த ஸ்பானியரை போன்று ஆங்கிலேயர்களான தாங்களும் திறமை மிக்கவர்களாக வாழ வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். அயல் நாடுகளான அயர்லாந்து,

பிரான்ஸ் நாடுகளில் போர்வீரராக இருந்து இவர் செய்த போர்த்திறமையினை அறிந்திருந்த எலிசபெத் மகாராணி, ராலேயின் மீது கவனம் செலுத்தத் தொடங்கினார்.

ராலேயின் சாதனைகளும் ஆரம்பமாயின. அமெரிக்காவில் குடியேற்ற முயற்சியில் வெற்றி கண்டார். செவ்விந்தியர்களுடன் நட்புக் கொண்டு உருளைக் கிழங்கையும், புகையிலையும் பயிரிடும் முறையைப் பழகிக் கொண்டார். "பைப்" வைத்துப் புகைப்பதை தொடக்கி வைத்த பெருமை ராலேக்கே உரியது. தென் அமெரிக்காவில் விளையும் தங்கத்தைத் தன் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ராலே எண்ணினார். ஆனால் அது தோல்வியில் முடிவுற்றது. அந்தப் பிரயாணம் வேறு வழியில் அவருக்கு உதவியது. சிறப்பு மிக்கதோர் நாவலாக அப் பயணத்தை எழுதினார்.

அவருடைய கஷ்டகாலம். எலிசபெத் அரசி இறந்ததும் பட்டத்துக்கு வந்த முதலாம் ஜேம்ஸ் அரசனால் சிறைப்படுத்தப் பட்டு பதின்மூன்று ஆண்டுகள் தண்டனை அனுபவித்தார். தண்டனை கொடுத்ததற்கு முக்கிய காரணம் எதுவும் இல்லை. எலிசபெத் அரசிக்குச் சாதகமாக இருந்தவர்கள் எல்லோருமே பழி வாங்கப் பட்டனர். ராலே அதில் முக்கியமானவராகக் கருதப் பட்டார். சிறையில்

இருந்து தம்மை விடுவிக்கப் பெரிதும் முயன்று கொண்டிருந்தார் ராலே.

தம்மை விடுவித்தால், தென் அமெரிக்காவின் தங்கப் புதையலை, அரசு உடைமையாக்குவதாக விண்ணப்பித்த வேண்டுகோளுக்கு மன்னன் செவி சாய்த்தான். ஆனாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஸ்பானியருடன் சண்டை போடக்கூடாது என்று நிபந்தனை இட்டான். ஆனால் ராலேயின் அந்தப் பயணம் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. அரசன் அவருக்குப் போதுமான வசதியைச் செய்து கொடுக்கவில்லை.

பழி வாங்கக் காத்திருந்த ஸ்பானியரோடு ராலே பேசாமல் இருக்கவும் முடியவில்லை. நிபந்தனையை மீறிச் சண்டை போட வேண்டி ஏற்பட்டது. ராலேயின் மகன் போரில் இறந்தான். ராலே கடும் நோயுற்று நாட்டுக்குத் திரும்பினார். பலமிழந்து கஷ்டப்பட்டு வந்திருந்த போதும் ராலேயை அரசன் மன்னிக்கவில்லை. 1618ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ராலே தலை துண்டிக்கப் பட்டு மரணமானார். நாட்டுக்காக உழைத்த "சேர். வால்டர் ராலே"யின் மரணம் பரிதாபத்துக்கு உரியதானது வேதனைப்பட வேண்டியதே!

# அதிவீரராம பாண்டியன்

அதிவீரராம பாண்டியன் என்பவர் இந்தியாவிலே கொற்கை நகரத்தில் (மதுரை) வீற்றிருந்து ஆட்சி புரிந்த அரசர். இவர் பாண்டிய மரபினர். இவரைத் தென்காசிப் பாண்டியர் என்றும் கூறுவர். இவருடைய ஆட்சின்காலம் 11–12ம் நூற்றாண்டு என்று தெரிகிறது.

இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர்.சிறந்த சிவபக்தர்.நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கை, நைடதம், இலிங்க புராணம், காசிக்கண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி, ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். அவை யாவும் இவரது புலமைக்கு எடுத்துக் காட்டாகும்.

இவற்றுள் நறுந்தொகை என்பது நல்ல தொகுப்பு என்று பொருள் பெறும். நல்ல நல்ல நீதிகளைத் தொகுத்தளிக்கும் நூல். எளிய நடையில் அமைந்தது. ஒவ்வொரு பாடலும் சிறப்பான நீதியைப் போதிக்கிறது. தீர்க்கதரிசி போல் அவர் கூறியுள்ள கருத்துகள் யாவும் வாழ்க்கையில் இன்றும் நம் கண் முன் நிதர்சனமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அவரின் தெள்ளிய சிந்தனைகள் சிலவற்றை இங்கே பாருங்கள்:

" தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவற்கு இருக்க நிழல் ஆகாதே"

(பனை மரத்தின் சுவை மிக்க பெரிய பழத்தின் ஒரு விதையானது, வானளாவி உயர்ந்து வளமாக வளர்ந்து இருந்தாலும், ஒருவர் தங்கி இருப்பதற்கு நிழலைத் தராது.)

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையிலும்
நுண்ணியதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே"

(சிறிய மீன் முட்டையைக் காட்டிலும் மிகச் சிறியதான ஆலமரத்து விதையானது, முளைத்துப் பெரிய மரமானதும், யானைப்படை, குதிரைப்படை,தேர்ப்படை, காலாட்படை முதலியவற்றோடு அரசர் தங்கி இருப்பதற்கு நிழலைத் தரும்.

"பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்

இது போன்ற அவரின் நல்ல தொகுப்புக்கள் சிறுவர்களுக்குப் பெரும் பயன் தரக்கூடியவை. ஔவையாரின் நூல்களைப் போல் இதற்கும் சிறப்பும் பெருமையும் உண்டு. ஆதலால் சிறுவர்களாகிய நாமும் வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை பயில்வோம்.

– முகுந்தன் மகேந்திரன் –

!!!

எல்லாவற்றையும் வெல்லும் வலிமையை நீங்கள் அடைய விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் எந்தக் காரியத்தையும் தன்னம்பிக்கையுடன் தன்னந்தனியாகச் செய்து முடிப்பதற்குத் தேவையான சக்தியுள்ளவராக உயர வேண்டும்.

ஜோர்ஸ் அலன்

!!!

சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் நேரத்தை ஒதுக்குங்கள். மிகுதி நேரமெல்லாம் முன்னேற வழியைத் தேடுங்கள்.

ஜூவல்லி –

உங்களுக்குத் தெரியுமா?

மகாத்மா காந்தி தனது இரண்டு கைகளிலும் எழுதுவதில் கெட்டிக்காரர்.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

புகழ் பெற்ற எழுத்தாளரான மில்ரன் "சுவர்க்கத்தின் இழப்பு" என்ற நாவலை எழுதினார். அந்த நேரத்தில் இவருக்குக் கண்பார்வை இல்லை.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

பிரான்ஸ் நாட்டை ஆண்ட 13ம் லூயி மன்னன் தனது வாழ் நாளில் ஐந்து முறை தான் குளித்தார்.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

இந்தியாவின் இமாசலப் பிரதேசத்தில் "பார்வதி பள்ளத்தாக்கு" என்ற இடமுண்டு. இங்கு "மலனா" என்ற சிறிய கிராமம் உண்டு. உலகின் பழமையான ஜனநாயகம் இங்கே தான் நடைமுறையில் உள்ளது. விசித்திரமான மொழியைப் பேசும் இவர்கள் கிரேக்க நாட்டின் மன்னனான மகா அலெக்சாண்டரின் போர்வீரர்களின் வம்சாவழியினர். அலெக்சாண்டரின் இந்தியப்போரின் பின் அவருடன் திரும்பாமல் அங்கேயே தங்கி விட்டனர்.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

போப் பதவி வகித்த ஒரேயொரு ஆங்கிலேயர் "நிக்கோலஸ் பிரேக்ஸ்பியர்" தான்.

தற்கால ஜனநாயகமுறை தோன்றியது பிரிட்டனில் தான். இதனைத் தொடக்கி வைத்தபர் சைமன் டீ மண்டன்போர்க் என்பவராவார்.

---

ஜோகன் ஹர்லிங்கர் என்பவர் பாரிஸில் இருந்து வியன்னாவிற்கு நடந்து சென்று சாதனை புரிந்தார். நடந்தது கால்களினால் அல்ல. கைகளினால் தான்.

---


இந்தியாவின் கடைசி மொகலாய மன்னன் பகதூர்ஷா. 1857ம் ஆண்டுப் புரட்சியில் பங்கு கொண்ட அவர் 1862ம் ஆண்டு ரங்கூனில் தூக்கிலிடப் பட்டார்.

---

புத்த மதத்தில் தியான முறையைப் பரப்பியவர் தென்னிந்திய அரச குலத்தவரான போதி தர்மர் ஆவார். கி.பி. 523ல் காஞ்சியில் இருந்து சீனா சென்று "சான்" என்னும் தர்மத்தைப் போதித்தார். அங்கிருந்தே ஜப்பான் நாட்டிற்கும் புத்தமதம் பரவியது. போதி தர்மரின் எருவச் சிலைகள் சீனாவில் பல இடங்களிலும் காணப் படுகின்றன.

---

## கண்டு பிடிப்பு



1798ம் ஆண்டு நோர்வே நாட்டில் இது நடந்தது. லேனா நதிக் கரையில் சென்று கொண்டிருந்த நாய் ஒன்று பனி படர்ந்திருந்த குழி ஒன்றைச் சுற்றிச் சுற்றிக் குரைத்துக் கொண்டது. வருவோரும் போவோருமாய் இருந்த சனங்கள் நாய் எதையோ கண்டு குரைப்பதை அவதானித்தனர்.

அந்த நாய் ஏன் வெகு நேரமாக ஒரே இடத்தில் நின்று குரைத்துக் கொள்கிறது சனங்களில் சிலர் நாயின் அருகில் வந்து பார்த்தார்கள். பனி மூடிய குழிக்குள் மிருகம் ஒன்று இறந்து போயிருப்பதைக் கண்டார்கள். அந்த மிருகத்தின் உடல் கெட்டு மணம் எதுவும் வீசாமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டனர்.

எந்தப் பொருளையும் குளிர்ந்த இடத்தில் வைத்தால் பழுதடையாமல் இருக்கும் என்பதை அப்போது தான் கண்டார்கள். அந்த வழியைக் கடைப்பிடித்துப் பனிக்காலத்திற்கு உணவுகளைச் சேமித்து வைத்தனர். இதை விஞ்ஞானிகள் மேலும் ஆராய்ந்தனர்.

குளிரில் கிருமிகள் செயல் பட முடிவதில்லை என்பதையும், எவ்வளவு காலமானாலும் கெடாமல் பொருட்கள் இருக்கும் என்பதையும் கண்டு பிடித்தனர். இந்தச் செயல் முறைகளைக் கொண்டு தான் ஏர்கண்டிசன் அமைப்புக்களும், குளிர் சாதனப் பெட்டிகளும் செய்யப் படுகின்றன.



# தலை காட்டாத தெனாலிராமன்.

தெனாலிராமன், கிருஸ்ணதேவராசன் எனும் மன்னன் அவையில் விகடகவியாக இருந்து உலகப் புகழ் பெற்றவன். தெனாலிராமன் தன் புத்திசாதுரியத்தால் விகடம் செய்வதில் கைதேர்ந்தவனாக இருந்தான்.

ஒருநாள் அரசஅவையில் தெனாலிராமன் கால-நேரம் அறியாது கோமாளித்தனம் செய்து சபையி-னரைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான். இதனால் அரசஅவை அலுவல்களை அரசனால் ஒழுங்காகக் கவனிக்க முடியவில்லை. அரசன் தெனாலிராமனைப் பார்த்து நீ இனிமேல் இந்தப் பக்கம் உன் முகத்தைக் காட்டக்கூடாது. ஓடிப்போ என்று கூறி விரட்டிவிட்டான்.

மறுநாள் அரசஅவை கூடியது. அரசன் அரச-சபைக்கு வந்து முதலில் சபையைப் பார்த்தான். தெனாலிராமன் அங்கு இல்லை என்ற மகிழ்ச்சியுடன் முக்கிய அலுவல்களைக் கதைக்கத் தொடங்கினான். சில நிமிடங்கள் கழிய சபையில் சலசலப்பும், ஆரவாரமும் எழுந்தது. அரசன் „ அங்கே என்ன சத்தம்?" எனக் கேட்டவாறு சபையைப் பார்த்தான். தலையில் பானை-யைக் கவிழ்த்து முகத்தை மூடியபடி தெனாலிராமன் சபையில் நுழைவதை மன்னன் கண்டான். சபையின் கலகலப்புக்கு இதுவே காரணம் எனக் கண்டு-கொண்டான்.

அரசன் சினம் கொண்டான். கோபத்துடன் „தெனாலிராமா! நான் எவ்வளவு கண்டித்துக் கூறியும் நீ



மறுபடியும் சபையில் உன் கோமாளி வேலையைத் தொடங்கிவிட்டாயா? எனக் கேட்டார். அதற்கு தெனாலிராமன், „வேந்தே! நான் கோமாளி வேலையைச் செய்கின்றேனா? உங்கள் கட்டளையைச் செய்கின்றேன்." என்று கூறினான். அதற்கு மன்னன் „நான் என்ன உத்தரவு இட்டேன்? என்று கேட்டான். தெனாலிராமன் „ வேந்தே! நேற்று என்னைப் பார்த்து இனிமேல் உன் முகத்தைக் காட்டக்கூடாது என்று உத்தரவு இட்டிருந்தீர்கள். ஆனால் என்னை உடம்பைக் காட்டக் கூடாது என்று கூறவில்லை. அதனால் முகத்தை மட்டும் மூடிக் கொண்டு வந்தேன்" என்று கூறினான். உடனே மன்னன் வாய்விட்டச் சிரித்தார். அரசன் தெனாலிராமா! உன்னுடன் வாக்குவாதம் செய்வது வீண்வேலை. நான் என்ன சொன்னாலும் உன் புத்திசாதுரியத்தால் எங்களைச் சிரிக்க வைத்துவிடுகின்றாய். இன்று முக்கியமான அலுவல்கள் ஆராய வேண்டியுளது. நீ ஒருபக்கமாய் இரு என்று கூறிவிட்டு தன் பணிகளைச் செய்யத் தொடங்கினான்.

(எழுதியனுப்பியவர் : கபிலன் பரமசிவம்)

## பழங்கள்

அணில் விரும்பி உண்பது கொய்யாப்பழம்
ஆனை விரும்பி உண்பது விளாம்பழம்
இனம் பல கொண்டது வாழைப்பழம்
ஈக்கள் மொய்பது நாவல்பழம்

உப்புத் தடவி உண்பது அன்னாசி
ஊட்டம் நிறைந்தது பப்பாளிப்பழம்
எட்டிப் பறிப்பது பலாப்பழம்
ஏறிப் பிடுங்குவது மாம்பழம்

ஐயத்தோடு உண்பது இலந்தைப்பழம்
ஒன்றொன்றாய் இருப்பது மாதுளம்முத்து
ஓட்டுடன் தொங்குவது புளியம்பழம்
ஔடதம் போன்றது தோடம்பழம்
இஃதெல்லாம் நிறைந்தது ஈழம்.

(எழுதியனுப்பியவர் மகிழினி பரமசிவம்)

## சொற்களைக்கண்டு பிடியுங்கள் முடிவு

### இ – வ
புண்ணியம்
ஆசை
மரி
மரிப்பு
முடி
மதி
கறை
சங்கம்
கம்
சரி
சரிகை
காகிதம்
தம்

### வ – இ
ஆபரணம்
கையெழுத்து
புத்தன்
சலி
பிரதி
தரை
முத்திரை
திரை
துன்பம்

### மே – கீ
புடையன்
ரதி
புரை
கரம்
காப்பு
புடவை
சரி
சரித்திரம்
திரம்
கலி
கலிகாலம்
காலம்
புலம்
சகி
சகிப்பு
முத்து
தரை
கீழ்
சைகை
தூரிகை

### கீ – மே
புத்தி
பரண்

### அண்ணி
சம்மதம்
தம்
மரி
காலி
கதி
புழு
சத்தம்

எழுதியவர்கள்:

1.மைதிலி மாசிலா................SAAR

2.பிரகாஸ் கந்தவனம்............NORWEY

3.சுகீவன் சண்முகலிங்கம்......CLAUSTHAL

4.சுஜீனா சண்முகலிங்கம்.......CLAUSTHAL

ஐ 5.ஜெயதீபாஇரத்தினசபாபதி......ESCHELBRONN

6மோகன் இரத்தினசபாபதி.......ESCHELBRONN

7.திரோஷினி ஹரிச்சந்திரன்......WILDEMANN

8.மஞ்சுளா சிவசம்பு..............LOHMAR

9.தனுஜா மாசிலா.................SAARBRÜCKEN

10.முகுந்தன்மகேந்திரன்.........BERG.GLADBACH

11.வித்யா சிவசுப்பிரமணியம்....SELM

12.கௌரியன் சிவானந்தராஜா...ELSDORF

13லக்ஸன் சிவானந்தராஜா.......ELSDORF.

14.ஷோபி யோகராஜா.............NORWEY

15.காந்தரூபன்......................NORWEY

16.கௌரியன்குலேந்திரன்..........DÜSELDORF

17. விஜிதா.V .....................DENMARK

ஐ இந்த அடையாளம் இடப் பட்டவர்கள் பரிசைப் பெறுகிறார்கள்.

# ஜீவ காருண்யம்

உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்று அனைத்து வேதங்களும் கூறுகின்றன. ஒருவர் கஷ்டப்படும் பொழுது அல்லது வியாதியால் துன்புறும் போது அவர்களுக்காக இரக்கப்பட்டு உதவி செய்வது ஜீவகாருண்யம். கால்ஒடிந்த ஆட்டுக்குட்டிக்காக கண்ணீர் விட்ட புத்தர் பெருமானின் போதனைகளை ஏற்றுக் கொண்ட நமது நாட்டில் கூட, உள் நாட்டுச் சண்டையால் அவதியுறும் எம் மக்களுக்கு பல வெளிநாட்டு பொது உதவி நிறுவனங்கள் அளப்பரிய தொண்டுகள் செய்து இருக்கின்றன.

ஒரு உயிரின் மேல் இரக்கப்படும் பொழுது சாதி, மதம், மொழி, இனம், நிறம், போன்ற பாகுபாடுகள் தெரிவதில்லை. இதற்கு உதாரணமாக சமீபத்தில் நான் கண்ட ஒரு காட்சியை உங்களுக்கு அறியத் தருகிறேன். அன்று வழக்கம் போல பாடசாலை முடிந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தேன். வழியில் அம்புலன்ஸ் வாகனம், தீ அணைக்கும் படை வாகனங்கள் அபாய ஒலியுடன் மிகவும் வேகமாக ரீரீ ரீ என்று அலறிக் கொண்டு வந்து கொண்டிருந்தன.

வீதிகளில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் எல்லாம், அபாய ஒலியுடன் வருகின்ற வாகனங்களுக்கு வழி விட்டு ஒதுங்கிக் கொண்டன. எங்கேயோ

தீப்பிடித்து விட்டது அதனால் தான் தீ அணைக்கும் வாகனங்களும் நீண்ட ஏணிகளுடன் செல்லுகின்றன என்று எண்ணிக் கொண்டேன். வாகனங்கள் சென்று மறைந்து விட்டன. வழியில் தான் ஏதாவது நடந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், அதைக் கண்டு விட ஆவல் கொண்டு மிகவும் வேகமாக நடந்தேன்.

நான் நினைத்தது போலவே, கண்ணுக்கெட்டிய தூரத்தில் சிவப்பு வாகனங்கள் நிற்பது தெரிந்தது. பலர் அந்த வாகனங்களின் அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். நானும் தோளில் சுமந்த புத்தகப்பையுடன் சென்று பார்த்தேன். அங்கே வயதான ஒரு ஜேர்மன் அம்மையார் தாரைதாரையாக கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார். மயக்கம் அடைபவரைப் போல காணப்பட்டார். அவர் அருகே அவர் கணவர் அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னபடி




அணைத்துக் கொண்டு நின்றிருந்தார்.

ஆனாலும் அவருடைய கண்களில் இருந்தும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவர்களுடைய இரண்டு பிள்ளைகளும் அப்பொழுது தான் காரில் வந்து இறங்கினார்கள். அவர்களும் அருகே வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆண்டவன் கைவிட மாட்டார்! எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

குடும்பத்திலுள்ள யாருக்கேனும் கடுமையான சுகவீனமோ! எப்படியென்றால் எதற்குத் தீயணைக்கும் வாகனம்? வீடு தீப்பிடித்ததாகவும் தெரியவில்லை என்று வீட்டை அண்ணாந்து பார்த்த பொழுது, வீட்டின் பின் புறத்திலுள்ள ஒரு பெரிய மரத்திலே தீயணைக்கும் படையினர் தங்கள் நீண்ட ஏணியைச் செலுத்தி அதில் ஏறிக் கொண்டிருந்தார்கள். அருகே சென்று பார்த்த பொழுது ஒரு பூனைக்குட்டி மரத்தின் மேலிருந்து கீழே இறங்கத் தெரியாமல் "மியாவ், மியாவ்" என்று பயந்து கத்திக் கொண்டிருந்தது. அதன் உயிரைக் காப்பாற்ற தீயணைக்கும் படையினர் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது அதை மீட்க முயன்று கொண்டிருந்தார்கள்.

–முகுந்தன் மகேந்திரன்–

# சொல்லித் தா!





ஆடிக் களிக்கும் மயிலே வா
ஆட்டம் எனக்குச் சொல்லித் தா!
பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப் பாடச் சொல்லித் தா!

தாவும் மானே அருகே வா
தாவிக் குதிக்கச் சொல்லித் தா!
கூவும் கோழி இங்கே வா
கூவி எழுந்திடச் சொல்லித் தா!

–அரிமழம். இராமகணபதி–

!!!

**அதிகாலைச் சூரியன் இருட்காலத்தை விரட்டி விடுவது போல தூய்மையான மனிதனின் மனத்தில் இருந்து தோன்றும் சிந்தனைகள் தீமையால் உண்டாகும் சக்திகளை எல்லாம் விரட்டி விடும்.**

கன்பூசியஸ் –

# பாலித்தீவு

இந்தோனேஷியாவைச் சேர்ந்த தீவுகளில் பாலித் தீவும் ஒன்றாகும். உலகின் மற்றப் பகுதிகளில் உள்ள நாகரீகத்தில் கலக்காது பழமையிலேயே வாழும் மக்களைக் கொண்ட நாடு. இந்துக் கலாச்சாரம், ஆலயங்கள், தெய்வங்கள், விழாக்கள் இவைகளிலேயே இம் மக்கள் தங்கி இருப்பதை இன்றும் காணலாம். இவர்கள் மக்களை இன்றும் பழைய காலத்தில் காணப்பட்ட நாலு வகையினராகவே பிரித்து வாழ்கின்றனர்.

முதலாம் நூற்றாண்டில் இங்கு வந்த கடல் வணிகம் செய்த வர்த்தகர்களால் இந்துமதம் இங்கு தோன்றியது. சமஸ்கிருத மொழியையும் அவர்கள் பின்பற்றிக் கொண்டனர். இப்பொழுதும் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கை அவர்கள் பேசும் மொழியில் காணக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்துக்கும் தனிக் கோயில் உண்டு. கோயில்களை இவர்கள் "பா" என்று அழைக்கிறார்கள்.

கோயில்கள் கற்களாலும் மரத்தினாலும் கட்டப் பட்டிருக்கும். பூஜை செய்பவர் பிராமண குலத்தவராகவே இருக்க வேண்டும். இவரைச் "பதண்டித" என்று அழைக்கிறார்கள். "பண்டித்"

என்னும் சொல் சமஸ்கிருத மொழியில் பிராமணனைக் குறிக்கும். கிராம மக்களின் சமூக வாழ்க்கையிலும் இவர்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றார்கள். இறந்து போனவர்களைக் கடவுளாக மதித்து வழிபடுகிறார்கள்.

இந்த வழிபாடும் இந்து கலாச்சார நெறிகளுக்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றது. சிவன், கிருஷ்ணன், விநாயகர் போன்ற இந்துக் கடவுள்கள் ஆலயங்களில் காணப்படுகின்றன. உலோகம், மரம், வெள்ளைக் களிமண் கொண்டு மிகவும் அழகான சிலைகளைப் பாலித் தீவிலுள்ள சிற்பிகள் செய்யும் திறன் கொண்டவர்கள். கோவிலிலுள்ள சிற்பங்கள் அந்த உண்மையைத் தெளிவு படுத்துகின்றன.

நடனம், பாடல்கள் போன்றவற்றில் ஈடுபாடு கொண்ட கலைஞர்கள் இருக்கிறார்கள். கோயில்களில் இராமாயணம், மகாபாரதம் இவற்றிலுள்ள கதைகள் நடனமாக ஆடப்படுகின்றன. "லேகாங்" எனப்படும் நடனம் பரதநாட்டியத்தைப் போன்று பிரபலம் ஆனது.

நெதர்லாந்து (Netherlands)




றைன் நதி கடலுடன் கலக்கும் வடகடல் கரையோரத்தில் நெதர்லாந்து இருக்கின்றது. இந்நாடு தாழ்நிலப்பரப்பில் இருப்பதால் கடல்நீர் நாடுமுழுவதும் பரவியுளது. பழைய குடியேற்ற நாடுகளில் இதுவும் ஒன்றாகும். இது 1658ஆம் தொடக்கம் 1796ஆம் ஆண்டு வரை இலங்கையை தன் உடைய குடியேற்ற நாடாக வைத்திருந்தது. இது ஜேர்மனிக்கு மேற்கே பெல்ஜியத்திற்கு வடக்கே அமைந்துளது.

இதன் நிலப்பரப்பு 40,844 சதுரகிலோமீற்றர். அங்கு வாழும் மக்கள் தொகை 14.56 மில்லியன். இதன் தலைநகரம் Amsterdam. ஆனால் பாராளுமன்றம் அமைந்துள்ள இடம் The Hague. இங்கு பேசப்படும் மொழி நெதர்லாந்து மொழி. இங்கு வாழும் இனம் Dutch ஆவர். இங்கு மக்கள் றோமன் கத்தோலிக்க சமயத்தையும் புரட்டஸ்தாந்து சமயத்தையும் பின்பற்றுகின்றார்கள். இந்நாட்டு நாணயத்தின் பெயர் Gulden. இங்கு பாராளுமன்ற குடியாட்சி நடைபெறுகின்றது. சிலவிடங்களில் மன்னரின் கட்டுப்பாடும் உண்டு.

இங்கு உலோகஉற்பத்தி, இயந்திர உற்பத்தி, எண்ணை சுத்திகரிக்கும் தொழில், வைரக்கல் வெட்டும் தொழில் என்பன நடைபெறுகின்றன. இங்கு கோதுமை, உருளைக்கிழங்கு, சீனிக்கிழங்கு, காய்கறிகள், பழ– வகைகள் பூக்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

## வரிக்குதிரை .

காடுகளில் வாழும் குதிரை இனங்களில் வரிக்குதிரைகளும் ஒன்றாகும். வரிக்குதிரை இன்று ஆபிரிக்காக் காடுகளிலே வாழுகின்றன. இவை கூட்டம் கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை. ஒரு கூட்டத்தில் ஐந்து தொடக்கம் பதினைந்து வுரிக்குதிரைகள் வரை இருக்கும். வரிக்குதிரைகள் எல்லாம் ஒரேமாதிரியான வரிகளைக் கொண்டவை அல்ல. ஒரே தன்மையான வரிகளைக் கொண்டவையே ஒரு கூட்டத்தில் இருக்கும். வரிக்குதிரை தன் கூட்டத்தை அடையாளம் காண்பது இவ்வரிகளைக் கொண்டே ஆகும்.

இவை தம் உணர்ச்சிகளை முகமூலமே வெளிப்படுத்துகின்றன. கோபமாக இருக்கும் போது காதுகளைப் பின்னுக்கு வளைத்திருப்பதுடன் பற்களையும் காட்டும். சந்தோசத்தினை வாய் திறந்திருப்பதுடன் காதுகளை நேராக கூர்மையாக வைத்திருக்கும். பயத்தினை பற்களைக் காட்டுவதுடன், காதுகளையும் வளைத்து வைத்துக் காட்டும்.

# சிட்டுக்குருவி

பள்ளிக்கூடம் போக வேணும்
அம்மாக்குருவி சொன்னது!
பாடம் நல்லா படிக்க வேணும்
அப்பாக்குருவி சொன்னது!

சிட்டுக்குருவி "சரிசரி" என்று
தலையை ஆட்டி நின்றது!
சரியாய்ப் படிச்சுப் பள்ளியிலே
பரிசு வாங்கித் வந்தது!

அம்மாக்குருவி அன்பாய் அதற்கு
ஆறு முத்தம் தந்தது!
அப்பாக்குருவி பஞ்சு மிட்டாய்
வாங்கி வந்து தந்தது!

சிட்டுக்குருவி பள்ளி எல்லாம்
சொல்லிச் சொல்லி மகிழ்ந்தது!
பட்டுச் சிறகை விரித்து வானில்
பறந்து பறந்து திரிந்தது!

-குழ. கதிரேசன்-



உலகம் முன்னேறி விட்டது. மனிதன் வளர்ந்து விட்டான் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் இன்னும் தன்னலம் எல்லாவற்றிலும் தலைமை வகிக்கிறது.


-மாக்ஸிம் கார்க்கி-

விவேகமும் வீரமும் கொண்ட மனிதர்களே தங்கள் தவறுகளை ஒத்துக் கொள்ளத் துணிவார்கள்.

-பெஞ்சமின் ஃப்ராங்ளின்-

மனத் திருப்தி மிகவும் முக்கியம். ஒரு காரியம் வெற்றி அடைந்தாலும் சரி, தோல்வியாக அமைந்தாலும் சரி அதன் முடிவுகள் நம்மைப் பாதிக்கக் கூடாது. ஏனென்றால், நாம் உண்மையாக முயற்சி செய்திருக்கிறோம். இப்படி எதிலும் எப்பொழுதும் உண்மையாக இருக்கும்போது அளப்பரிய தன்னம்பிக்கை பெறுகிறோம். அதனால் நாம் தொடர்ந்து முயற்சி செய்து வெற்றி பெறுவோம். எனவே பொய் கலவாத மனிதனாக உங்களைத் தட்டித்தட்டி உருவாக்கிக் கொள்ளுங்கள்.

-றொபேட் அன்ரனி-


ஈழம்
எங்கள்
நாடென்போம்
இதையே
தினமும்
பாடென்போம்
தொடர்புகளுக்கு
Siruvar Amutham
Alef Str.11
50189 Elsdorf
Germany
02271/66527